Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO. CC 66/2020 Pw - 1**
**DATE 22.02.2021**

Name : பாண்டியராஜன் த/பெ. லோகநாதன்
Village :
Taluk :
Caste :
calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day

<u>முதல் விசாரணை</u>

நான் பாண்டிச்சேரியில் வசித்து வருகிறேன். நான் அசோபா நிறுவனத்தில் மரக்காணம், கடலூர், பாண்டிச்சேரி ஆகிய கிளைகளுக்கு திட்ட இயக்குநராக இருக்கிறேன். பூமிதானா அபிவிருத்தி குறித்து வினோபாபா அவர்களால் 1969 ல் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்தியாவில் தமிழகம் உட்பட 7 மாநிலங்களில் இருக்கும் நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு நிலங்கள் வழங்குவதற்காக செயல்பட்டு வருகிறது. கிராம வளர்ச்சி, ஊரக வளர்ச்சி ஆகியவற்றிற்கும் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்களுக்கு சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு கல்வி கொடுக்கும் பொருட்டும் செயல்பட்டு வருகிறது. கடந்த 1995 ல் சொரப்பட்டு கிராமத்தை சேர்ந்த மக்கள் மரக்காணத்தில் உள்ள எங்கள் நிறுவனத்தை அணுகி தங்களுடைய ஊர் பிள்ளைகள் படிப்பதற்கு பள்ளிக்கூடம் கட்டி ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். சொரப்பட்டு கிராமத்தை சேர்ந்த ஆனந்தபிள்ளை த/பெ.வேதாச்சலம் என்பவர் தாமாக முன்வந்து தன்னுடைய 20 சென்ட் சர்வே எண்.26/3 விஸ்தீரனம் கொண்ட சொரப்பட்டிலுள்ள நிலத்தை பள்ளிக்கட்டிடத்திற்காக தர விருப்பம் தெரிவித்தார். ஜூன் மாதம் 1995 ல் மேற்கூறிய நிலத்தை பள்ளிக்கூடத்திற்காக எங்கள் நிறுவனத்திற்கு கிரையம் செய்து கொடுத்தார். 5.6.1995 என்ற தேதியிட்ட அந்த கிரைய ஆவணம் அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த நிலத்தை நாங்கள் சுவாதீனம் பெற்று சுமார் 1500 சதுர அடியில் பள்ளி கட்டிடம் கட்டினோம். கல்வித்துறையில் உரிய உரிமம் பெற்று கல்வி கட்டிடம் கட்ட தொடங்கினோம். அந்த

பள்ளிக்கூடத்திற்கு சர்வ சேவா பள்ளி, சொரப்பட்டு என்று பெயரிடப்பட்டது. சுமார் 100-120 வரை கிராமத்தை சுற்றியிருந்த குழந்தைகள் அங்கு வந்து படித்தார்கள். 2008 வரை அந்த பள்ளிக்கூடம் நடந்தது. அதன்பிறகு அரசுப்பள்ளிகள் வந்ததால் பிள்ளைகளின் வருகை பள்ளிக்கு குறைந்தது. அதன்பிறகு 2008 ல் அந்த பள்ளியை நாங்கள் மூடிவிட்டோம். அதன்பிறகு எதிரி கண்ணன் ஆனந்தபிள்ளையிடம் இருந்து எங்களுக்கு வழங்கிய நிலத்தை பதிவுசெய்யப்படாத கிரைய ஆவணத்தின் மூலம் தனக்கு கிடைக்கப்பெற்றதாக தயார் செய்து அதன்பேரில் தனது மனைவி எதிரி மங்கலட்சுமி அவர்களின் பெயரில் ஒரு தானப்பத்திரம் 2014 ல் பதிவு செய்துள்ளார். ஆனந்தபிள்ளை எதிரி கண்ணனுக்கு எழுதி கொடுத்ததாக கூறப்படும் பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் அ.த.சா.2 ஆகும். எதிரி கண்ணன் தனது மனைவி மங்கலட்சுமிக்கு எழுதி கொடுத்த தானப்பத்திரம் அ.த.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனந்தபிள்ளை எங்கள் நிறுவனத்திற்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் சர்வே எண் தவறுதலா 26/3 என்பதற்கு பதிலாக 26/1 என்று குறிப்பிடப்பட்டிருந்து 2014 நாங்கள் பட்டா மாற்றம் செய்யும் போது தெரியவந்தது. மேற்கூறிய எதிரிகள் ஏற்படுத்திய வில்லங்கம் குறித்து அப்பொழுதுதான் தெரியவந்தது. இது குறித்து ஆனந்தபிள்ளையிடம் கேட்டபோது தான் அவ்வாறு எந்த கிரைய ஆவணமும் எழுதி தரவில்லை என்று கூறினார். எங்களுக்கு கொடுத்த கிரைய ஆவணத்தில் சர்வே எண் தவறாக குறிப்பிட்டு இருந்ததால் அதற்கு பதிலாக ஆனந்தபிள்ளை 10.09.2014 தேதியிட்ட பிழைத்திருத்த ஆவணம் ஒன்று எழுதிக்கொடுத்தார். அந்த பிழைத்திருத்த ஆவணம் அ.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கண்ணன் எங்களை அணுகி ஆனந்த பிள்ளை அவர்கள் 1993 ல் தனக்கு கிரையம் செய்துவிட்டதால் அந்நிலத்தை நாங்கள் உரிமை கோரமுடியாது என்று கூறினார். நாங்கள் நிலஅகபரிப்பு கண்காணிப்பாளர், விழுப்புரம் அவர்களிடம் எதிரிகள் கண்ணன் மற்றும் அவரது மனைவி மீது புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.த.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல்துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

1 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார். 25.03.2014 ல் தனலட்சுமி என்பவருக்கு தான செட்டில்மண்ட் பத்திரத்தை சார்பதிவாளர் பதிவுசெய்துள்ளார் என்று என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 9.8.2014 அன்று நான் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தேன். சாட்சி திரும்பவும் 10.11.2014 ல் புகார் அளித்ததாக கூறுகிறார். அந்த ஆவணத்தை பதிவு செய்த சார்பதிவாளர் யார் என்று எனக்கு தெரியாது. என் முன்னிலையில் அவ்வாறு யாரையும் விசாரிக்கவில்லை. 6.11.2014 ல் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்பு சார்பதிவாளரை

காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரியான கணபதி தானசெட்டிலமண்ட் பத்திரம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் என்ன பொறுப்பு வகித்தார் என்று எனக்கு தெரியாது. 25.03.2014 ல் சங்கரலிங்கம் உதவியாளராக சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தார், அன்றை தினம் சார்பதிவாளர் சிவக்குமார் பணியில் இல்லாததால் அந்த ஆவணம் பதிவு செய்யப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டது, 26.03.2014 ல் சார்பதிவாளர் சிவக்குமார் பணிக்கு வந்ததால் அதன் பிறகு அந்த ஆவணம் விடுவிக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்து தெரியவந்ததும், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அது எவ்வாறு பதிவுசெய்யப்பட்டது என்பதை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் ஏ1 கணபதி தான் அந்த ஆவணத்தை பதிவு செய்தார் என்று எனக்கு தெரியாது. எதிரி கணபதி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்யவில்லை நான் முறையாக விசாரணை செய்யாமல் அவர் மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் எதிரி கணபதியின் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தானம் பத்திரம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் எதிரி கணபதி சார்பதிவாளராக பணி செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கும் ஏ1 எதிரி கணபதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவா் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டாா்//

நீதித்துறை நடுவா் எண்.2, திண்டிவனம்.